# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2198/56 - 2020 ඔක්තෝබර් මස 23 වැනි සිකුරාදා - 2020.10.23

*2198/56 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**கிழக்கு மாகாண மாகாண சபை**

அறிவித்தல்

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் ஆகிய என்னால் 2020, யூலை மாதம் 13 ஆந் திகதிய 2184/9 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்பான அறிவித்தலில் கீழ்வரும் பிரிவுகள் பின்வருமாறு திருத்தப்படுகிறது. இத்திருத்தமானது 2020, யூன் மாதம் 23 ஆந் திகதியிலிருந்து செயற்படுத்தப்படல் வேண்டும்.

**அனுராதா யஹம்பத்,**
ஆளுநர்,
கிழக்கு மாகாணம்.

ஆளுநர் செயலகம்,
கிழக்கு மாகாணம்,
2020, செத்தெம்பர் 21.

1A - PG 5110 — 25 (2020/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஒழுங்குவிதிகள்**

***மாநகர சபை :***

*2020, யூலை மாதம் 13 ஆந் திகதிய 2184/9 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் மாநகர சபை தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் உப பிரிவு 1.1 ஆனது இரத்துச் செய்யப்பட்டு பின்வரும் வசனங்கள் பிரதியீடு செய்யப்படுகிறது :-*

*1. மாநகர முதல்வர்களுக்கு, மாநகர சபையின் உத்தியோகபூர்வ போக்குவரத்திற்கான எரிபொருள் வரையறை -*

*1.1 மாநகர சபையின் வாகனமொன்று மாநகர சபையின் எல்லைக்குள் அல்லது மாநகர சபை எல்லைக்கு வெளியே பயன்படுத்தப்படுமாயின் மாதாந்த டீசல்/பெற்றோல் லீட்டர் எரிபொருள், மாநகர சபை மூலம் சபையில் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் வரையறைகளுக்கு உட்பட்டதாக மாநகர சபை நிதியிலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.*

***நகர சபை :***

*2020, யூலை மாதம் 13 ஆந் திகதிய 2184/9 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் நகர சபை தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் உப பிரிவு 1.1 ஆனது இரத்துச் செய்யப்பட்டு பின்வரும் வசனங்கள் பிரதியீடு செய்யப்படுகிறது :-*

*1. நகர சபையின் தவிசாளர்களுக்கு நகர சபையின் உத்தியோகபூர்வ போக்குவரத்திற்கான எரிபொருள் வரையறை -*

*1.1 நகர சபையின் வாகனமொன்று நகர சபையின் எல்லைக்குள் அல்லது நகர சபை எல்லைக்கு வெளியே பயன்படுத்தப்படுமாயின் மாதாந்த டீசல்/பெற்றோல் லீட்டர் எரிபொருள், நகர சபை மூலம் சபையில் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் வரையறைகளுக்கு உட்பட்டதாக நகர சபை நிதியிலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.*

***பிரதேச சபை :***

*2020, யூலை மாதம் 13 ஆந் திகதிய 2184/9 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் பிரதேச சபை தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் உப பிரிவு 1.1, 1.2 மற்றும் 1.3 ஆனது இரத்துச் செய்யப்பட்டு பின்வரும் வசனங்கள் பிரதியீடு செய்யப்படுகிறது :-*

*1. பிரதேச சபையின் தவிசாளர்களுக்கு, பிரதேச சபையின் உத்தியோகபூர்வ போக்குவரத்திற்கான எரிபொருள் வரையறை -*

*1.1 பிரதேச சபையின் வாகனமொன்று பிரதேச சபையின் எல்லைக்குள் அல்லது பிரதேச சபை எல்லைக்கு வெளியே பயன்படுத்தப்படுமாயின் மாதாந்த டீசல்/பெற்றோல் லீட்டர் எரிபொருள், பிரதேச சபை மூலம் சபையில் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் வரையறைகளுக்கு உட்பட்டதாக பிரதேச சபை நிதியிலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*